**Judicial Form No-53**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No 167 / 2018**
**Prosecution Witness –PW1 , LW1**

| Name: | ராமகிருஷ்ணன் | Caste: | |
|---|---|---|---|
| Father's Name : | மாரியப்பன் | Calling: | |
| Village: | கோவில்பட்டி | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 66 |

**( A1, A2 absent. 317 Crpc petition filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019. 29.02.2024**

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால்அழைப்பாணையின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**குறுக்கு விசாரணை:**

நான் இறுதியாக மதுரை தியாகராஜா கல்வியியல் கல்லூரியில் வேலை பார்த்து 2023 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். கடந்த 2006 முதல் 2016 வரையில் எங்கு நான் பணி செய்து வந்தேன் என்றால் கோவில்பட்டி லாயல் டெக்டெயில்ஸ் மில்லில் நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். மதுரை தியாகராஜா கல்வியியல் கல்லூரியின் நிறுவன இயக்குனரும், கோவில்பட்டி லாயல் டெக்டெயில்ஸ் மில்லின் நிறுவன இயக்குனரும் ஒரே நபர் என்றால் சரிதான் . அவரின் பெயர் திரு .மாணிக்கம் ராமசாமி ஆகும். சம்பவ காலத்தின் போது திரு .மாணிக்கம் ராமசாமி அவர்கள் உயிருடன் தான் இருந்தார் .கடந்த 2017 ஆம் ஆண்டு காலமானார்.

நான் மேற்கண்ட நிறுவனத்தில் 29 ஆண்டுகளாக பணியாற்றி வந்ததால் எனக்கு மேற்படி நிறுவனத்தின் விவரங்கள் நன்கு தெரியும் என்றால் சரிதான் . கோவில்பட்டி லாயல் மில் ஸ்டோரில் எனக்கு கீழே பணி செய்யும் நபர்களின் அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் அவர்கள் எந்த மாதிரியான பணிகளை மேற்கொள்வார்கள் என்பது எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். என்னுடைய நிறுவனத்தில் Raw Material (Cotton) Ventor Department இல் பஞ்சு வெளியில் இருந்து வாங்கி அதை நூலகவோ , ஆடையாகவோ செய்வோம் என்றால் சரிதான்.

HR Department (Human Resource)இன் பணியானது வேலைக்கு ஆள்களை தேர்வு செய்து, உரிய துறைக்கு அனுப்புவது என்றால் சரிதான் . Store Department பணியானது

பொருட்களை ஆர்டர் செய்து வாங்குவது , பாதுகாப்பது, பொருட்களை ஒப்படைப்பு செய்வது போன்ற வேலைகளை செய்வது என்றால் சரிதான். மேலும், Spinning Production. Spinning Maintance, நூல் உற்பத்தி, நூல் ஏற்றுமதி, மிஷின் பராமரித்தல் , மெக்கானிக் பழுது பார்க்கும் பணி , நூல் பதப்படுத்துதல் ,Weaving Production, Weaving Maintance ஆகியவை எங்கள் நிறுவனத்தில் நடைபெறும் என்றால் சரிதான். WareHouse Department இன் பணி Packing செய்வதென்றால் சரிதான்.

Muthu Industries. Lakshmi Industries. Kani Plastics, Royal Plastics , Royal Polymers, Venus Papercones, Sudharshan Papertubes, Gomathy Papertubes மேற்படி நிறுவனங்களில் இருந்து எங்கள் நிறுவனத்திற்கு தேவையான மூலப்பொருட்களை (Packing Materials) வாங்குவதற்கு Purchase Order கொடுப்போம் என்றால் சரிதான் . 1வது எதிரியின் பணியானது மேற்சொன்ன நிறுவனங்களில் இருந்து மூலப்பொருட்களை வாங்கும் போது அதற்குரிய Purchase Order தயார் செய்வதற்காக சென்னையில் உள்ள Purchasing Manager கிரி என்பவருக்கு அனுப்பப்பட்டு மேற்கண்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட தொகையை இறுதியாக முடிவு செய்து பின்னர் கோவில்பட்டியில் உள்ள 1வது எதிரிக்கு மெயில் மூலமாகவோ, தபால் மூலமாகவோ அனுப்புவார். மேற்கண்ட Purchase Order இல் பொருளின் விலை, பொருளின் அளவு, பொருளின் விபரம் மற்றும் மொத்த தொகை இருக்கும் என்றால் சரிதான்.

மேற்கண்ட Purchase Order யை கோவில்பட்டியில் உள்ள 1வது எதிரிக்கு மேல் அதிகாரியான Store Manager முருகேசன் அவர்கள் இறுதியாக மேற்சொன்ன பொருளின் விலை , பொருளின் அளவு , பொருளின் விபரம் மற்றும் மொத்த தொகைகளை சரிபார்த்து மேற்சொன்ன 6 நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும் என்றால் சரிதான். அதன்பிறகு இறுதியாக முருகேசன் என்பவர் கையெழுத்து செய்த பின்பு தான் Purchase Order இறுதி செய்யப்படும் என்றால் சரிதான் . நான் கொடுத்த புகார் மனுவில் 1வது எதிரியை தனிப்பட்ட முறையில் Purchase Order கொடுக்கமுடியாது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் பணிபுரிந்த 2006 முதல் 2016 காலகட்டத்தில் 1வது எதிரி கொள்முதல் விலையை விட அதிகப்படியான அளவு தொகை Purchase Order கொடுத்ததாக மேற்சொன்ன 6 நிறுவனங்களில் இருந்தோ , வேறு ஏதேனும் நிறுவனங்களில் இருந்தோ, என்னிடமோ, எனது நிறுவன இயக்குனரிடம் இருந்தோ புகார் மனு

பெறப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் இருந்து Purchase Order வேறு நிறுவனங்களுக்கு கொடுத்த பிறகு என்ன நடைமுறை என்றால் பொருட்களை Purchase Order பெற்றுக்கொண்ட நிறுவனமே Transport செலவு செய்து அவர்களே பொருட்களை எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பார்கள் . அந்த பொருட்களை Store Department ஊழியர்கள் வாங்கி சரிபார்த்து வைப்பார்கள் என்றால் சரிதான் . அதில் Store Manager முருகேசன் மற்றும் Store Assistant சபரிமணி, வைரம் ஆகியோர்கள் பொருட்களை சரிபார்த்து வாங்குவார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை தாண்டி பொருட்களை அலுவலகத்தில் வரவும் முடியாது வெளியில் செல்லவும் முடியாது என்றால் சரிதான்.

மேற்படி நபர்கள் தான் பொருளின் விலை , பொருளின் அளவு , பொருளின் விபரம், பொருளின் தரம் மற்றும் மொத்த தொகை குறித்து ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். மேற்படி 6 நிறுவனங்கள் வழங்கிய Supply Invoice யை Store Manager முருகேசன் பெற்று அதை சரிபார்த்து பின்னர் Account Department க்கு அனுப்பப்படும் என்றால் சரிதான் . அதை Account Manager பெயர் தற்போது ஞாபகம் இல்லை . அவர்தான் பெறுவார் . மேலும் மேற்படி எங்கள் நிறுவனத்தினை சேர்ந்த Account Department இல் அன்றைய தினம் யார் இருக்கிறார்களோ அவர்கள் கையெழுத்து செய்து காசோலை மேற்படி 6 நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் என்றால் சரிதான்.

மேலும் மேற்சொன்ன விபரங்கள் 1வது எதிரி தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது என்றால் சரிதான் . Purchasing Order வழங்குவதும், அதற்குரிய பணத்தொகையை எங்கள் நிறுவனத்தில் இருந்து காசோலையாகவோ , பணமாகவோ கொடுப்பதற்கு 1வது எதிரிக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரிதான் . தலைமை அலுவலகமான சென்னையில் வேலை பார்த்த Purchase அதிகாரியான அஸ்வின் என்பவர் பணம் கையாடல் செய்ததாக அவரை விசாரித்த போது அவருடைய விசாரணைகளை என்னை வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் விசாரிக்கும்போது கொடுக்கவில்லை என்றால் சரிதான் . எங்கள் நிறுவனத்தில் ஆண்டுதோறும் கொள்முதல் செய்ததற்கு வரவு செலவு பார்க்கப்படும் என்றால் சரிதான் . அந்த வரவு செலவு கணக்குகளை நான் புகார் மனுவில் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

புகார் மனுவில் கடந்த 02.02.2013 முதல் 02.04.2016 வரை தனது தாயார் திருமதி.தங்கபுஷ்பம் வங்கி கணக்கில் TMB Sankarankovil Branch என்பதற்கான ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன் . 2 வது எதிரிக்கு TMB Sankarankovil Branch இல் Account இல்லை என்றால் சரியல்ல . நான் வழக்கிற்காக பொய்யாக சம்மந்தம் இல்லாத ஏதோ ஒரு அக்கவுண்டை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரில் வேறு சக அலுவலர்கள் பண மோசடி செய்ததாக அவர்களை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுகொள்கிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார் மனுவானது நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான் . கடந்த 12.12.2016 அன்று என்னால் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவானது கோவில்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை . சென்னை தலைமை அலுவலகத்தில் உள்ள நிறுவன மேலாளர்கள் 1 வது எதிரியின் மீது கோவில்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கலாம். அது பற்றி எனக்கு தெரியாது.

1 வது எதிரியுடன் கூட்டுசதி செய்த நபர்கள் என்று மேற்படி 6 நிறுவனங்களை சேர்ந்தவளான சந்திரசேகர், கருப்பையா, ஞானமுத்து மற்றும் ராய் சங்கர நராயணன் , தினேஷ் என்ற தினேஷ் குமார்ஆகியோர் எதிரிகளாக சேர்க்கப்பட்டு , மேற்படி எங்கள் நிறுவனத்தில் எந்த கையாடலும் செய்யப்படவில்லை என்று மேற்படி எதிரிகளை விசாரணை அதிகாரி வழக்கில் இருந்து கழித்துள்ளார் என்றால் சரியல்ல . மேற்கண்ட புகாரானது 12.12.2016 அன்று தயார் செய்யப்பட்டு அதன்பின்னர் 2017 ஆண்டு மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தேதி ஞாபகம் இல்லை.

அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை 2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது . மேற்கண்ட 6 நிறுவனங்களில் இருந்து 2 வது எதிரிக்கு வழங்கப்பட்டகாசோலை விபரத்தை போலிஸ் விசாரணையிலோ , புகார் மனுவிலோ கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் காசோலை எண் , தேதி , தொகை இல்லை என்றால் சரிதான் . நான் போலிசாரிடம் கொடுத்துள்ளேன் . அ.சா.2 , அ.சா.3 இல் எங்கள் நிறுவனத்தால் வழங்கிய Purchasing Order இல்லை என்றால் சரிதான் . போலிஸ் விசாரணையின் போது கொடுத்துள்ளேன் . அ.சா.1 புகார் மனு பின்னிட்டு

வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.2 மற்றும் அ.சா.3 இல் 1வது எதிரியின் பெயர், மற்றும் அவர் குறித்த விவரங்கள் இல்லை என்றால் சரிதான்.

1வது எதிரி கமிஷன் பணம் பெற்று அதன் மூலமாக நாங்குநேரி தாலுகாவில் 3.63 செண்ட் நிலம் வாங்கியது நேரடி விசாரணையின் போது 1வது எதிரி சொன்னார்.மேற்படி 1வது எதிரி சொன்னதற்கு எழுத்து மூலமோ, வீடியோ பதிவோ கிடையாது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது 1வது எதிரி மாதம் மாதம் ரூ .750 பணம் செலுத்தி வாங்கிய நிலம் என்பதால் அ .சா.5 ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அ.சா.ஆ.4 ஆனது 1வது எதிரியின் குடும்பத்தினர் எந்த விதமானதொழிலும் செய்யக்கூடாது என்பதற்காக கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 4 ஆனது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அ.சா.ஆ.7 ஆனது 2 வது எதிரியின் Account க்கு வரவு செலவு வைத்தற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 2 வது எதிரி தனிப்பட்ட முறையில் தொழில் செய்திருக்கலாம் அதில் வரவு செலவு வைத்திருக்கலாம் என்றால் சரியல்ல.

2 வது எதிரியின் Account Statment இல் பணம் பெற்ற நபரும், Supply யில் உள்ள நபரும் ஒரே நபர் தான் என்பதற்கான ஆவணம் புகார் மனுவிலோ , போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் போலிசார் விசாணையில் கொடுத்துள்ளேன். நான் புகாரில் சொன்ன Sankarankovil TMB Branch க்கும், நீதிமன்றத்தில் அ.சா.ஆ 7 இல் தாக்கல் செய்தது வெவ்வேறு கிளையை சேர்ந்தது என்றால் SankarnaKovil கிளை வரவு செலவை Thoothukudi Head Office இல் இருந்து பெறப்பட்டது என்றால் சரிதான் . அ.சா.ஆ.7 க்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.5 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டதை1,2 எதிரிகள் தரப்பில் அசல் ஆவணங்களாக நீதிமன்ற பார்வைக்கு தாக்கல் செய்கிறேன் . **Perfect Land Promoters க்கு செலுத்திய பண ரசீது எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்/– V.C.குபேரசுந்தர்,
நீதித்துறை நடுவர் எண்.4,
தூத்துக்குடி.